**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 91/2019**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 19.01.2026 | | |
| பெயர்: | ஞானகுணாளன் (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | அகோரம் |
| கிராமம்: | வாணகிரி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 67/2026 |

**<u>3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :19.01.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 16.15)**

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னையும் அண்ணாதுரையின் வாரிசு என்று விளம்புகை செய்ய வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இறந்துபோன அண்ணாதுரைக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராமலிங்கம், சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 198/2017 என்ற வழக்கில் தான் மட்டுமே இறந்துபோன அண்ணாதுரைக்கு வாரிசு என்று தீர்ப்பாணை பெற்ற விபரம் எனக்கு 2019ல் தெரியவந்தது.

2. அண்ணாதுரையின் உடன்பிறந்தவர்களில் செல்லப்பன், பெரியநாயகி ஆகியோர் காலமாகிவிட்டனர். அவர்களின் இறப்புச்சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இறந்துபோன அண்ணாதுரைக்கு நானும்தான் வாரிசு என கோரி 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் 1,2 பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட விரோதம் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.

198/2017ல் வாரிசு சான்றிதழ் பெறப்பட்டுவிட்டதால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் 3,4 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–16.22)**